## <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 27/2022 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சந்திரா | நாள் | 12.09.2024 |
| கணவர் பெயர் | செல்வராஜி | | |

**<u>பிரதிவாதி தரப்பில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

8) பிரதிவாதிக்கு பொதுவில் பாத்தியப்பட்ட 1/2 சென்ட் நிலத்தை தற்போது வரை யாரும் பிரதிவாதியிடமிருந்து கிரயம் பெறவில்லை என்றால், சரியல்ல. தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களில் தார்சு வீடு கட்டி நான் வசித்து வருவதாக கூறுவது தவறானது என்றாலும், நாங்கள் காலி நிலம் விட்டுதான் வீடு கட்டியுள்ளோம் என்றாலும், சரிதான்.

9) என் வீட்டிற்கு வடக்குபுறம் உள்ள காலிநிலத்தை நாங்கள் தடவழியாக பயன்படுத்தி வருகிறோம் என்றால், சரிதான். இவ்வழக்கிற்கு முன்பு பிரதிவாதியும், மேற்படி வடக்குபுறமுள்ள தடவழியை தான் தன் வீட்டிற்கு செல்வதற்கு பயன்படுத்தி வந்தார் என்றால், சரியல்ல. என் வீட்டிற்கு கிழக்குபுறமுள்ள காலி இடத்தில் மாட்டுக்கொட்டகை உள்ளது என்றால், சரிதான்.

10) மேற்படி மாட்டுகொட்டகையிலிருந்து வெளிவரும் கழிவு நீர் பிரதிவாதியின் வீட்டின் வெளிப்புற கதவின் அருகில் தேங்கி நிற்கும் என்றால், சரிதான். ஆனால், மேற்படி நிலம் எங்களுடையது. மேற்படி கழிவு நீர் தேங்கி நிற்கும் நிலத்தை தடவழியாக பிரதிவாதி பயன்படுத்தி வந்ததால் மேற்படி கழிவுநீர் தேங்கி நிற்பது குறித்து எங்களுக்கும், பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது என்றால், சரிதான். மேற்படி பிரச்சனையினால் தான் எங்களுக்கும், பிரதிவாதிக்கும் இடையே மனஸ்தாபம் ஏற்பட்டது என்றால், சரிதான். ஆனால், அது எங்களது நிலம்.

11) அதற்கு பின்னிட்டு தான் பிரதிவாதி பாகபிரிவினையின் மூலம் தனக்கு பாத்தியப்பட்ட தடவழியை கோரினார் என்றால், சரியல்ல. பிரதிவாதி ஒருபோதும் எங்களது சொத்தை விலைக்கு கேட்கவில்லை என்றால், சரிதான். கடந்த 08.01.2022ம் தேதியில் பிரதிவாதி அவரது ஆட்களுடன் வந்து தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்ததாக நான் சொல்வது தவறானது என்றால்,

சரியல்ல. சுமார் எத்தனை மணிக்கு அவ்வாறு பிரதிவாதி வந்து தகராறு செய்தார் என்றால், மதியம் சுமார் 2.00 மணி இருக்கும். பிரதிவாதி பொட்டனேரி கிராமத்தில் தனியார் இரும்பு ஆலையில் பணியாற்றி வருகிறார் என்றால், சரிதான். நான் சொன்ன தேதியில் பிரதிவாதி பணியில் இருந்தார் என்றால், அவர் பணி முடிந்து வரும்பொழுதுதான் மேற்படி தகராறு ஏற்பட்டது.

12) பிரதிவாதி யார் யாருடன் வந்து தகராறு செய்தார் என நான் என் வழக்கில் குறிப்பாக சொல்லவில்லை என்றால், சரிதான். ஊர் பெரியவர்கள் மூலம் மேற்படி பிரச்சனையை தடுத்ததாக நான் சொல்லும் நிலையில் யார் யார் பஞ்சாயத்து செய்தனர் என நான் அவர்களது பெயரையும் குறிப்பாக சொல்லவில்லை என்றால், சரிதான். நான் சொல்வது போல் மேற்படி தேதியில் எவ்வித சங்கதியும் நடைபெறவில்லை என்றாலும், அதனால்தான் நான் யாருடைய பெயரையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும், சரியல்ல.

13) 08.01.2022 ம் தேதியில் பிரதிவாதி அடியாட்களுடன் தகராறு செய்ததாக சொல்லும் நிலையில் அது தொடர்பாக காவல்நிலையத்தில், புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால், கொடுத்துள்ளேன். அவ்வாறு புகார் அளித்ததற்கான ஆவணங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியவில்லை. அவ்வாறு நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றாலும், நான் சொல்வது போல் புகார் ஏதேனும் அளித்திருந்தால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், சரியல்ல.

14) எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை என் அனுமதியின்றி யாரும் கிரயம் பெற முடியாது என்றால், சரிதான். அவ்வாறு உள்ள நிலையில், தாவா சொத்தை பிரதிவாதி கிரயம் பெற்றே தீருவேன் என சூளுரைத்ததாக நான் கூறுவது தவறானது என்றால், சரியல்ல. பொது தடவழியை தனக்கு எழுதி கொடுக்க வேண்டும் என பிரதிவாதி எங்கள் மீது புகார் அளித்ததாக சொல்லும் நிலையில் அதற்கான ஆவணங்கள் எதையேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

15) பிரதிவாதி என் தார்சு வீட்டை இடிக்க வேண்டும் என சொன்னதாக நான் சொல்வது

பொய்யானது என்றாலும், அவருக்கு பாத்தியப்பட்ட பொது தடவழியை மட்டும்தான் பிரதிவாதி உரிமை கோரினார் என்றாலும், சரியல்ல. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 1/2 சென்ட் பொது தடவழியில் தற்போது மாட்டுக்கொட்டகையும், என் வீட்டின் சிறு பகுதியும் உள்ளது என்றால், சரியல்ல. பிரதிவாதி என் வீட்டை இடிக்க கோரி வழக்கு தாக்கல் செய்யப்போவதாக என்னிடம் கூறியதாக நான் சொல்வது தவறானது என்றாலும், அவர் தனக்கு பாத்தியப்பட்ட பொது தடவழியைத்தான் உரிமை கோரினார் என்றாலும், சரியல்ல.

16) தாவா 1-வது அயிட்ட சொத்தின் முதல் தாக்கு மற்றும் 2-வது அயிட்ட சொத்துக்களை பொறுத்து பிரதிவாதி எந்தகாலத்திலும் எனது உரிமையில் தலையிட மாட்டார் என உறுதி கூறுகிறார் என்றால், அது தவறானது. தாவா 1-வது அயிட்ட சொத்தில் 2-வது தாக்கை பொறுத்து வாதிகளுக்கும், பிரதிவாதிக்கும் சம உரிமை உள்ளது என்றால், சரியல்ல.

17) பிரதிவாதிக்கு வலிப்பு நோய் உள்ளது என்றால், சரிதான். அவ்வாறு உள்ள நிலையில் பிரதிவாதி செல்வாக்கு மிக்கவர் என நான் சொல்வது தவறானது என்றால், சரியல்ல. தாவா 1-வது அயிட்ட சொத்திலுள்ள 2-வது தாக்கு நிலத்தில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 1/2 சென்ட் நிலத்தை பொறுத்து நான் எவ்வித பரிகாரமும் பெற உரிமையற்றவர் என்றால், சரியல்ல. மேற்படி 1/2 சென்ட் நிலத்தை பொறுத்து எவ்வித சட்டப்படியான ஆவணங்களுமின்றி நான் தாக்கல் செய்துள்ள என் வழக்கு செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

18) வா.சா.ஆ.1 பாகபிரிவினை ஆவணத்தில் 17-வது பக்கத்தில் கண்டுள்ள பொது சராவில் "நம்மில் 1,2, 3 லக்கமிட்டவர்கள் பிரித்துக்கொண்டுள்ள நிலங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்தாற்போல் உள்ளதால் அவரவர் பாக நிலங்களுக்கு எப்போதும் போல் போக வர உள்ள மாமூல் வழியில் அவரவர்கள் பாக நிலங்களுக்கு எப்போதும் போல் போய் வரவேண்டியது. மேலும் நாம் பிரித்துக்கொண்டுள்ள தடவழியில் செடி, கொடிகளை நட்டு மற்றவர்களுக்கு இடையூறு செய்யக்கூடாது. பொது தடவழியை நாம் தடத்திற்காக மட்டுமே பயன்படுத்தி வரவேண்டியது" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அவ்வாறு பொது தடவழியே இல்லை. நான் தாக்கல் செய்துள்ள என் தரப்பு

ஆவணத்திற்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

19) இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது, 2ம் வாதி தன்னை கொலை முயற்சி செய்ய முற்பட்டதாக கூறி பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால், சரிதான். ஆனால், அது பொய் புகார். மேற்படி புகார் தொடர்பாக 2ம் வாதி மீது போலீசார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளனர் என்றால், சரிதான். தற்போது 2ம் வாதி பிணையில் வெளிவந்துள்ளார் என்றால், சரிதான். தற்போது மேற்படி குற்றவழக்கு நிலுவையில் உள்ளது என்றால், சரிதான்.

20) பிரதிவாதி என் தமையன் என்றால், சரிதான். என் கணவர் உயிருடன் உள்ளவரை எங்களுக்குள் சுமூகமான உறவுமுறை இருந்தது என்றால், சரிதான். என் கணவர் இறந்ததற்கு பின்னிட்டு, பிரதிவாதியின் தடவழியை அபகறிக்க வேண்டி தவறான சொத்து விவரத்தின் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்து, அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிப்பதால், என் வழக்கு அதிகபட்ச செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

ஓம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.